பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

ஈழநாடு
The EELA NADU

வரை 19 ஆடி 8 ஷஃபா 6 இதழ் 162

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 23-7-77

லயலா சோப்
2-வது தயாரிப்பு

சன்சயின் சோப் இப் பொழுது இலங்கையில் எல்லாப் பகுதியிலும் விற்பனை ஆகிக்கொண்டே இருக்கிறது.

லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி.

பி. பி. ஸி. யில் தமிழர் கூட்டணி

லண்டன், ஜூலை 22

இலங்கையில் நடந்து முடிவடைந்த பொதுத் தேர்தல் பற்றிய செய்திகளுக்கு பி பி ஸி வானொலி மிகவும் முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

தேர்தலின் ஆரம்ப முடிவுகளை உடனே வெளியிட்டதுடன் ஐக்கியதேசிய கட்சிக்கு நாற்பது ஆசனங்கள் கிடைத்த உடனேயே 'ஆட்சி அமைப்பு' பற்றியும் ஆளும் கட்சிகளுக் கிடைத்த பெரும் தோல்வி குறித்தும் விமர்சனம் செய்திருந்தது.

பி. பி. ஸி. வானொலியின் இன்றையச் செய்தி விமர்சனத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணி

(6-ம் பக்கம் பார்க்க)

பிரதமர் ஜே. ஆர்.
இன்று பதவியேற்பு

சட்டம், ஒழுங்கு நிலைநாட்ட கோரிக்கை

(கொழும்பு, சனி)

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி மகத்தான வெற்றியீட்டியிருப்பதைத் தொடர்ந்து நாட்டின் புதிய பிரதமராக திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா இன்று சனிக்கிழமை பதவியேற்கலாம் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

இதே நேரத்தில், நாட்டில் சட்டமும் ஒழுங்கும் எந்த விதத்திலும் நிலைநாட்டப்பட வேண்டும் என்று திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா பொது மக்களை நேட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி பெரும் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து நேற்று கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா நாட்டு மக்களுக்கு முதல் தடவையாக செய்தி விடுத்தார்.

'பொதுத் தேர்தல் முடிவடைந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பிரதமர் பதவியைப் பொறுப்பேற்க வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார்.

'தேர்தலின் கடைசி முடிவும் அறிவிக்கப்பட்டபின்னர் நான் பிரதமர் பதவியை பொறுப்பேற்பேன். அதன் பின்னர் பிரதமர் என்றவகையில், நான் நாட்டுமக்களுக்குச் செய்தியொன்றை விடுப்பேன்'

மக்கள், திட்டவட்டமான தீர்ப்பை வழங்கிவிட்டார்கள். இச்சந்தர்பத்தில் நாட்டில் அமைதியையும், சட்டம் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டியது எல்லோருடைய கடமையுமாகும். எனது கட்சியினர், சக பிரஜைகளுடன் நாட்டில் அமைதியை நிலைநாட்ட வேண்டும். எந்த விதமான வன்செயல்களிலும் எவரும் ஈடுபடுவது எச்சந்தர்பதிலும் தவிர்க்கப்படவேண்டும். எம்மை எதிர் நோக்கும் பிரச்னைகளை தீர்க்க முயல்வோம். பகைமை பாராட்டமல் சட்டத்தையும் ஒழுங்கையும் கடைப்பிடிக்க உங்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன்.' என்று தமது செய்தியில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா கோரியுள்ளார்.

தேர்தல் முடிவுகள்

97- மட்டக்களப்பு

(இரு அங்கத்தவர்கள்)

செ. இராசதுரை த.வி.கூ.	26,648
அஹமது பரீத் மீராலெப்பை ஐ.தே.க.	25,345
காசி ஆனந்தன் தமிழரசு	22,443
பதியுதீன் மஹ்மூத் ஸ்ரீ.ல.சு.க.	21,275
ராஜன் செல்வநாயகம் ஸ்ரீ.ல.சு.க.	11,797
வி. விநாயகமூர்த்தி சுயேச்சை	383

செ. இராசதுரை 1,303 அதிகப்படியான வாக்குகளால் முதல் அங்கத்தவராகவும் அஹமது பரீத் மீராலெப்பை 2,303 அதிகப்படியானவாக்குகளால் இரண்டாவது அங்கத்தவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

மஸ்கெலிய-நுவரெலிய தேர்தல் முடிவு

இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை அதிகாலை 5-15 மணிவரை மஸ்கெலிய நுவரெலியா கொகுதி தேர்தல் முடிவுகள் வெளியிடப்படவில்லை.

மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட இப்புதிய தொகுதியில் இ. தொ. கழகத் தலைவர் திரு. எஸ். தொண்டமானும், திரு. அனுரா பண்டாரநாயக்காவும் போட்டியிடுகின்றனர்.

கட்சி நிலை

ஐக்கிய தேசியக் கட்சி	137
தமிழர் விடுதலை கூட்டணி	17
சிறி லங்கா சுதந்திரக் கட்சி	06
லங்கா சம சமாஜக்கட்சி	...
கம்யூனிஸ்ட் கட்சி	...
சுயேச்சை	01

புதிய பிரதமர் ஜே. ஆர்.

கொழும்பு, வெள்ளி

ஈழத்தின் அடுத்த பிரதமராக பதவியேற்கப்போகும் ஐ.தே. கட்சித் தலைவர் திரு ஜே.ஆர்.ஜெயவர்தனா, உயர் நீதிமன்ற நீதியரசர் ஜெயவர்தனாவின் கிரேஷ்ட புதல்வரானவர். இவருக்கு இப்போது வயது 72.

1970ம் ஆண்டில் ஆட்சி மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பேற்ற திரு. ஜெயவர்தனா, 1965ம் ஆண்டில் காலஞ்சென்ற டட்லி சேனநாயகாவின் தேசிய அரசாங்கத்தில் ராஜாங்க அமைச்சராக பதவி வகித்தவர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் அவர் அவ்வேளை பணிபுரிந்தார்.

இலங்கை உட்பட பல வெளிநாடுகளிலும், திரு. ஜே. ஆர் ஜெயவர்தனா ஒரு சிறந்த அரசியல்வாதி என்ற பாராட்டைப் பெற்றவர். கொழும்புத் திட்டம் அமுல் செய்யப்படுவதற்கு அவர் ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கவை.

கொழும்பு ரோயல் கல்லூரியிலும் இலங்கை சர்வகலாசாலையிலும் பயின்ற திரு. ஜே. ஆர். ஜெயவர்தனா, 1931ம் ஆண்டில் அட்வகேட்டாகத் தேறினார். எனினும் இவர் சட்டத்துறையில் நீடிக்கவில்லை. 1940ம் ஆண்டில் அரசியல் உலகில் இவர் இறங்கினார்.

1940ம் ஆண்டிலிருந்து 1943ம் ஆண்டுவரை இவர் கொழும்பு மாநகராட்சி மன்ற உறுப்பினராக இருந்தார்.

அதிகாரதுஷ்பிரயோகம் ஊழலை வெறுப்பவர்

ஐக்கிய தேசியக் கட்சிக்குப் புத்துயிர் அளித்து, கிராமப்புற மக்களையும் உள்ளடக்கியப் பொருளாதார அமைப்பு ஒன்றினை அமைக்கும் முயற்சியில் 1970ம் ஆண்டில் இருந்து அவர் தீவிரமாக ஈடுபட்டு, சமூக மாறுதல் ஒன்றினை ஏற்படுத்தி ஜனநாயக அடிப்படையில் அதிகாரத் துஷ்பிரயோகம்-ஊழலற்ற, சோஷலிஸ சமுதாயம் படைப்பதனை தம் இலட்சியமாகக் கொண்டவர் அவர். அவர் கைக்கொண்ட நடவடிக்கைகளை நாட்டின் இளைஞர்களும், ஏனைய பெரியவர்களும் ஆதரித்தனர் என்பதே ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய வெற்றி ஊர்ஜிதம் செய்கிறது என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ)

இலங்கையில் எதிர்க்கட்சி இருக்குமா?
கூட்டணியே இருக்க நேரலாம்

திரு அமிர்தலிங்கம் கருத்து

யாழ்ப்பாணம், வெள்ளி

தென்னிலங்கை தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது இலங்கையில் எதிர்க்கட்சி ஏற்படுமோ தெரியாது. அப்படியானால் உண்மையான எதிர்க்கட்சியாக தமிழர்விடுதலைக்கூட்டணி இருக்கவேண்டி வரும்'

யாழ். பழைய பூங்காவில் அமிர்தலிங்கம் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது காங்கேசன் துறை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ஏ. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

நான் பெற்ற வெற்றிமறைந்தும் மறையாத நிலையில் பிரிந்தும், பிரியாத நிலையில். எமது -வழிகாட்டியாக இருக்கப் போகின்ற தந்தை செல்வாவின் வெற்றியாகும். இந்த வெற்றியில் காங்கேசன்துறை இளைஞர்களுக்கும் பெரும் பங்குண்டு. இத்தொகுதியில் குறுகிய காலம்தான் உழைக்க, முழுவேலையையும் பொறுப்பேற்று இளைஞர்கள் செய்தார்கள்.

தமிழ் இனத்தின் திருப்பு முனையில் நிற்கின்றோம்.

(க)

மணிவாக்கு

பொறுமையாலும் சமத்துவ நோக்காலும் எய்த முடியாதது எதுவுமில்லை. நாளாந்த வாழ்க்கையனுபவத்தால் இவ்வுண்மையை ச்¡சரியென யாரும் அறிந்து கொள்ளலாம்.
— மகாத்மாகாந்தி.

ஈழநாடு
THE EELANAADU

அதிசயம் ஆனால் உண்மை!

அதிசயம் ஆனால் உண்மை!

நடக்கமுடியாத சம்பவங்கள் நடந்துவிட்டால் இப்படிச் சொல்வதுண்டு.

இந்த அதிசயம் இலங்கையில் இப்போது நடந்திருக்கிறது.

உலகில் எந்த நாட்டிலும் இப்படி ஓர் அதிசயம் இதுவரை நடந்ததாக வரலாறு இருப்பதாகத்தெரியவில்லை.

முடியாட்சிக்கெதிராகச் சதிசெய்துஇம்மாசனத்தைக் கைப்பற்றிய கதைகளும் ஆட்சிபீடத்திலிருந்தவர்களின் கொடுங்கோன்மையை எதிர்த்து ஆயுதப்புரட்சிகள் நடைபெற்றதும் மக்களாட்சியில் மக்கள் சலிப்படையும் சமய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இராணுவம் புரட்சிச் சதிமூலம் ஆட்சியைக் கைப்பற்றிய சம்பவங்களும் அண்மைக் காலம்வரை உலகம் அறிந்து கொண்ட நிகழ்ச்சிகள.

ஜனநாயக நாடுகளில் வன்செயல்களால் ஆட்சிபீடத்தில் மாற்றம் செய்வதற்குப் பதிலாக வாக்குரிமையின்மூலம் அமைதிப் புரட்சி ஏற்படுவது வழமை.

பெரும் போராட்டங்கள் நடத்தி அரும்பெரும் தியாகங்கள் செய்து இந்தியாவுக்கு விடுதலைகொடுத்து இந்தியமக்களாலேயே ஆட்சிபீடத்தில் காலத்துக்குக்காலம் அமர்த்தப்பட்டுவந்தஇந்தியதேசிய காங்கிரசின் போக்கில் வெறுப்படைந்த இந்திய மக்கள் முப்பதாண்டுகால இந்திய காங்கிரசின் ஆட்சியை சமீபத்தில்தான் தமது வாக்குரிமையின் மூலம் அமைதிப் புரட்சி செய்து அகற்றினர்

ஆனால்பதிய ஆட்சியாளரைத்தட்டிக்கேட்பதற்கேற்றவகையில் முன்னர் ஆட்சிபீடத்திலிருந்தவர்களை எதிர்க்கட்சிஎன்றபொறுப்பு வாய்ந்த ஸ்தானத்தில் இந்திய மக்கள் அமர்த்தினர்.

ஆனால் இலங்கையில் நேற்று முன்தினம் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் இலங்கை மக்கள் தங்கள் வாக்குரிமைமூலம் ஏற்படுத்திய புரட்சி, முன்னர் ஆட்சிபீடத்திலிருந்து கொடிகட்டிப் பறந்தவர்களுக்குஆட்சியாளரைத் தட்டிக்கேட்பதற்கான பலத்தைக்கூடக் கொடுக்க மறுத்ததுதான்.

இந்த நாடு அரசியல் சுதந்திரம்பெற்றபின் ஆட்சிபீடத்தில் அமரும் வாய்ப்பைப் பெற்றுவந்திருப்பது ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும்தான். இந்த இரண்டு கட்சிகளும் இரு குடும்பங்களின் செல்வாக்கிலும் பெயரிலும்தான் இந்தப் பாக்கியத்தைப்பெற்று வந்திருக்கின்றன.

இடதுசாரிக் கட்சிகளும் வேறு கட்சிகளும்கூட ஆட்சிபீடத்திற்கு வரவேண்டுமானால் இந்த இரண்டு கட்சிகளில் ஏதாவது ஒன்றுடன் சேர்ந்தே ஆகவேண்டும்.

கடந்த ஏழு ஆண்டுகளாக ஆட்சிபீடத்திலிருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இடதுசாரிக் கட்சிகள் சிலவும் சிலகாலம்சேர்ந்திருந்தன. இதன்பின் அதிலிருந்து சிலர் வெளியேற்றப்பட்டனர். சிலர் சமயம் பார்த்து வெளியேறினர். ஆனாலும் கடந்த ஏழாண்டு கால அனுபவத்தை மக்கள் மறக்கவில்லை ஆட்சிபீடத்திலமர்ந்திருந்த கட்சியையும் அதற்கு உதவியாகவும் உடந்தையாகவும் இருந்தவர்களையும் இத்தேர்தலில் முற்றாக நிராகரித்துவிட்டனர்.

ஐக்கியதேசியக் கட்சியும் முன்னர் இப்படி மக்களால் நிராகரிக்கப்பட்டவரலாறு நாடறிந்தஉண்மை.

ஆனால் அச்சமயங்களில் குடும்பச் செல்வாக்கிலேயே அந்தக்கட்சி தங்கியிருந்தது. மக்களால் காலத்துக்குக்காலம் நிராகரிக்கப்பட்டபோது அதைமீண்டும் புனரமைப்புச்செய்து கட்டி வளர்த்தவர் திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தனா.

இதன் பயனாக இன்று கட்சியில் களையெடுப்புச் செய்து குடும்பச் செல்வாக்கில் தங்கியிராமல் புதிய கொள்கையையும் இட்டங்களையும் வைத்து இத்தேர்தலில் மக்கள்முன் சென்று அவர்களின் அபரிமிதமான ஆதரவைப் பெற்றுள்ளார்.

அறுபதும் ஆற்றலும் நிறைந்த திரு. ஜெயவர்த்தனா நாட்டை எதிர்நோக்கியுள்ள பல பிரச்னைகளுக்கும் நிதானத்துடன் நியாயமான தீர்வு காண்பாரென்றே எதிர்பார்க்கலாம்.

1972-ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட குடியரசு அமைப்புத் திட்டத்துக்கு ஐக்கியதேசியக் கட்சியும் அன்று ஆதரவளித்தது. ஆனால் அந்த அமைப்பை அது முற்றாக ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் ஐக்கியதேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தால் குடியரசு அரசமைப்பில் மாறுதல் செய்யப்போவதாகவும் தெரிவித்திருந்தது. தமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இதைத் தெளிவாக்கி இருந்தது.

இதேசமயம் தமிழ்மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகித்துவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் புதிய குடியரசு அமைப்பை தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்பதைப் பலவழிகளிலும் எடுத்துக் கூறி வந்துள்ளனர்.

புதிய குடியரசு அரசமைப்பு உருவாக்கப்பட்ட பின் முதல்தடவையாக நடைபெற்றுள்ள இந்தப் பொதுத்தேர்தலில் ஆளும் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் அதனுடன் கூட்டுச்சேர்ந்து குடியரசு அரசமைப்புத் திட்டத்தை உருவாக்கிய இடதுசாரிக்கட்சிகளையும் தென்னிலங்கை மக்கள் முற்றாக நிராகரித்திருப்பதும் குடியரசுஅரசமைப்பை ஏற்றுக்கொள்ள மறுக்கும் தமிழர்விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகளை தமிழ் மக்களுக்கு அமோக ஆதரவளித்துத் தெரிவுசெய்திருப்பதும் சிந்திக்கவேண்டிய விஷயம்.

மக்களின் கருத்துக்கு திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா மதிப்பளித்து தமிழ்மக்களின் பிரச்னைகள் கோரிக்கைகள் உட்பட சகல பிரச்னைகளுக்கும் விரைவில் தகுந்த வழி காண்பாரென்றே நம்புவோம்.

இத் தேர்தலில் இன்னுமொரு படிப்பினையையும் மக்கள் புகட்டியுள்ளனர். காளான் கட்சிகளுக்கோ கூட்சிவிட்டுக் கட்சிமாறி நேரத்துக்கேற்றபடி நடந்து கொள்பவர்களுக்கோ இவியும் இடமில்லையென்பதை மக்கள் தெளிவாக்கியுள்ளனர். இதுபற்றி அரசியல் வாதிகள் நன்கு ஆலோசிக்கவேண்டியது அவசியம்.

தமிழ் ஈழம் அமைக்க ஆணையிட்டுவிட்டார்கள்

வெற்றியீட்டிய யோகேஸ் நன்றி

யாழ்ப்பாணம், சனி

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு நீங்கள் அளித்த வாக்கு தமிழ் ஈழம் அமைக்கும் ஆணையாகும் என யாழ்ப்பாண எம்.பி.யாக தெரிவு செய்யப்பட்ட திரு வெற்றிவேலு யோகேஸ்வரன் கூறினார்.

யாழ்.பழைய பூங்காவில் திரண்டு நின்ற மக்கள் முன்னிலையில் திரு.யோகேஸ்வரன் பேசும்போது கூறியதாவது:

யார் இந்த யோகேஸ்வரன் என்ற கேள்விக்கு தகுந்தபதில் அளித்துவிட்டார்கள். அவர்தான் யாழ்ப்பாண தேசிய அரசபேரவை உறுப்பினர் என பதில் அளித்துவிட்டார்கள்.

கொஞ்சநாட்களுக்கு இளைஞர்கள் உற்சாகத்துடனும் ஆர்வமுடனும் இருப்பார்கள். ஆதலால் பொலிஸார் பொறுமையுடன் கடமையாற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நாம் சுதந்திர இயக்கத்தை நடத்துகின்றோம். ஆதலால், எல்லாரும் ஒரே அணியில் சேர வேண்டும். என்னை எதிர்த்துப் போட்டியிட்டவர்களையும், அவர்களை ஆதரித்தவர்களையும், அவர்களின்மனம் புண்படாதபடி நமது இயக்கத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அவர்களை நேசக்கரம்நீட்டி நமது இயக்கத்தில் சேருங்கள், அரசாங்க அதிபருக்கும். தேர்தல் அணையாளருக்கும், பொலிஸாருக்கும் நன்றினைய தெரிவித்துக்கொள்கிறேன் (க)

'சிவா'வை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்

இளைஞரின் அன்புப்பிடியில் யோகேஸ்

யாழ்ப்பாணம். வெள்ளி

முழுஇலங்கையிலும் அதிகப்படியான மேலதிக வாக்குகளால் நல்லூர்த் தொகுதியில் தெரிவு செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி செயல் அதிபர்களில் ஒருவரான திரு. எம். சிவசிதம்பரம் வெற்றி பெற்றபின் அரசாங்க செயலகத்திலிருந்து ஆதரவாளர்கள் புடை சூழ பழைய பூங்காவிற்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார்.

பழைய பூங்காவாசலை அவர் அடைந்ததும் அங்கே திரண்டிருந்த மக்கள், பலத்த கரகோஷம் செய்து வரவேற்றனர். இளைஞர்கள் ஒருவர்பின் ஒருவராக மாலை சூட்டினர்கள். உடுப்பிட்டித் தொகுதியில் வெற்றி பெற்ற திரு. இராசலிங்கமும், இதே சமயம் மேடைக்கு வந்தபோது பலர் மாலை சூட்டி வரவேற்றனர்.

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் வியாழன் பகல் 5மணி முதலே மக்கள் திரளத்தொடங்கி விட்டனர். கச்சேரிப் பகுதியில் உள்ளவிதியெல்லாம் போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டிருந்தது.

இரவு 6 மணிக்குப் பின்னர் ஒவ்வொரு தொகுதிகளிலிருந்தும் வாக்குச்சீட்டுப் பெட்டி அரசாங்க செயலகத்தை வந்தடைந்தன. செயலக கீழ்ப் பகுதியிலும், மேல்மாடியிலும் உள்ள அறைகளிலும் பழைய கச்சேரியிலுள்ள அறைகளிலும் வாக்குச்சீட்டுகள் எண்ணப்பட்டன.

இரவு 10 மணிக்குப் பின்னரே வாக்குச்சீட்டுகள் ஒவ்வொரு அறையிலும் எண்ண ஆரம்பிக்கப்பட்டது. பெட்டியிலுள்ள வாக்குச்சீட்டுகள் கலந்து கட்டுகளாக்கப்பட்டு கணக்கெடுக்கப்பட்ட பின் தனித்தனியாகக் கட்டப்பட்டு எண்ணும்வேலை ஆரம்பிக்கப்பட்டது.

எல்லாரும் வந்திருந்தனர்

தொகுதிகளில் போட்டியிட்ட அபேட்சகர்கள் அநேகமாக எல்லாரும் வந்திருந்தனர். கிளிநொச்சித் தொகுதியில் சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்ட திரு.செ.குமாரசூரியர் வரவில்லை.

அதிகாலை 3 மணிக்கே முதலாவதாக மானிப்பாய்த் தொகுதி முடிவு அறிவிக்கப்பட்டது.

கூச்சலுக்கு மத்தியில்

கச்சேரிப் பூங்காவிலுள்ள மேடையில் வெற்றி பெற்ற அபேட்சகர்கள் உரையாற்றினர்கள். மானிப்பாய்த்தொகுதியில் போட்டியிட்டு தோல்வியுற்ற திரு. இ. முதலியாரும் நல்லூர்த்தொகுதியில்போட்டியிட்டு தோல்வியுற்ற திரு. இராஜராஜேஸ்வரன் தங்களாசாவும் பலத்த கூச்சலுக்கு மத்தியில் ஒலி பெருக்கியில் உரக்கப்பேசித் தங்களுரையை சுருக்கமாக முடித்துக்கொண்டனர்.

வட்டுக்கோட்டை முன்னாள் எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் போட்டியிட்ட காங்கேசன்துறைத் தேர்தல் முடிவும் வட்டுக்கோட்டைத் தேர்தல் முடிவும் ஒரே சமயத்தில் அறிவிக்கப்பட்டன.

இதேபோல உடுப்பிட்டிமுன்னாள் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் போட்டியிட்ட நல்லூர்த்தொகுதி முடிவும் உடுப்பிட்டித்தொகுதி முடிவும் ஒரே சமயத்தில் அறிவிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தொகுதி முடிவும் காலையில்தான் அறிவிக்கப்பட்டதாக

இளைஞர்கள் ஆர்வம்

யாழ்ப்பாணத் தொகுதித் தேர்தல் முடிவை அறிவதற்கு இளைஞர்கள் உணர்ச்சி மிகுந்து காணப்பட்டனர் எங்கும் பரபரப்பாக இருந்தது. திரு. யோகேஸ்வரன் வெற்றிபெற்றுவிட்டார் என்றறிந்ததும் இளைஞர்கள் ஓடோடிவந்து மாலை சூட்டிகட்டியணைத்து அவருக்கு முத்தமாரிபொழிந்தனர்

அரசாங்க அதிபரின் காரில் அவர் சென்றதும், வாசலில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் திரண்டு நின்று வாழ்த்தொலி முழங்கினர். கூட்டத்தைச் சமாளிக்க இளைஞர்கார் மற்ற வாசலினூடாக பழைய பூங்காவையடைந்தது.

முதலாவது தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும், அங்கு மிங்குமாக வெடியோசை கேட்க ஆரம்பித்தது. திரு யோகேஸ்வரன் வெற்றி அறிவிக்கப்பட்டசமயம் நாலா திசைகளிலும் விடாமல் வெடி

(6ம் பக்கம் பார்க்க)

உதவி வைத்திய அதிகாரிகள் கூட்டம்

பண்டத்தரிப்பு, வியாழன்

அகில இலங்கை அரசாங்க பதிவு பெற்ற உதவி வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.கிளையின் விசேஷ பொதுக்கூட்டம் இம்மாதம் 24-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள ஹோட்டல்மேல் மாடியில் நடைபெறவிருக்கிறது.

டாக்டர்ரி. கோபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் தாய்ச்சங்கத் தலைவர், செயலாளர் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். (அ)

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்

உறுப்பினர் ராஜினாமா

தொழிற்சங்க நடவடிக்கை

மாவிட்டபுரம், வெள்ளி

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள், சங்கத்தலைவர் திரு ரி பி. முருகையா இயக்குநர் சபைக் கூட்டத்தில் நடந்துகொண்ட முறையை ஆட்சேபித்து தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவதற்கு அவருக்கு ஒரு வாரகால அவகாசம் கொடுத்துள்ளனர்.

சங்க இயக்குநர் சபைக்கூட்டத்தில் வைத்து, ஒரு பெண் ஊழியரை அவமானப்படுத்தும் வகையில் தகாத வார்த்தைகளினால் சங்கத்தலைவர் பேசினாராம். அதே இயக்குநர் சபை முன் அப்பெண்மணியைப் பார்த்துப் பேசிய தகாத சொல்லை வாபஸ் பெறவேண்டுமென தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க சுதந்திரக் கூட்டுறவு ஊழியர் சங்கம், அகில இலங்கைக் கூட்டுறவு ஊழியர் சங்கம் ஆகியன அவரிடம் கோரியுள்ளன.

சங்க எல்லைக்குள் கூட்டம் நடத்த தலைவரால் அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து, சங்க முன்றலில் நடந்த மேற்படி சங்க ஊழியர்களின் கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது.

அச்சொல்லை ஒருவாரத்திற்குள் வாபஸ் பெறத் தலைவர் தவறின்தொழிற்சங்கநடவடிக்கையில் இறங்குவதென அவர்கள் தீர்மானித்துள்ளனர்

திரு. முருகையாவின் நடத்தையை ஆட்சேபித்து, அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட இயக்குநர் சபை உறுப்பினர்களில் ஒருவரும் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலைத் தொழிலாளர் சங்கத் தலைவருமான திரு. எஸ். கணபதிப்பிள்ளை தமது உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துள்ளார். (அ)

"தமிழ்ஈழக் கோரிக்கையை மக்கள் ஏற்றுக்கொண்டனர்"

யாழ்ப்பாணம், சனி

"சாவகச்சேரித் தெகுதியில தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டேன் திரு. வி. குமாரசாமி தமிழ் ஈழக்கோரிக்கையை பூரணமாக ஆதரித்து போட்டியிட்டார். திரு. சி. பொ. மயில்வாகனமும், திரு. சதா நடராசாவும், தமிழ் ஈழக் கோரிக்கையைப் பூரணமாகஆதரித்து போட்டியிட்டார்கள். ஆகவே, அங்கு பதியப்பட்ட வாக்குகளில் 289 வாக்குகளை விட ஏனைய வாக்குகள் தமிழ் ஈழக கோரிக்கையை, ஆதரித்து கிடைத்த வாக்குகள் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்."

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் திரண்டிருந்த மக்கள் முன்னிலையில் உரையாற்றிய சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபாலா தேர்தல் முடிவுகளை ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் அறிவித்தார். உதவி தேர்தல் ஆணையாளர் திரு. ஆர்.யோகநாதன் முடிவுகளை தமிழில் வெளியிட்டார்.

திரு வி. என். நவரத்தினம் மேலும் கூறியதாவது;- தமிழ் ஈழக் கோரிக்கையை முன் வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி சாவகச்சேரித் தொகுதியில் என்னை நிறுத்தியது. சாவகச்சேரித் தொகுதியில் தமிழ்க்காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்துள்ளதா இல்லையா என்பது பற்றித்தான் என் தொகுதியில் கேள்வி எழுப்பப்பட்டு மக்கள் சிந்தனைகள் தேவையற்ற பக்கம் திருப்பப்பட்டது; தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்கள் கூட்டணியில் இணைந்துள்ள தென்பதை இத்தேர்தல் முடிடி தெளிவாக்கிவிட்டது, தமிழ்க்காங்கிரஸ் ஆதரவாளர்கள் கூட்டணியை ஆதரித்துள்ளார்கள். சாவகச்சேரியில் தாய்க்குலம் முன்னணியில் நின்று தேர்தலை நடத்தினர்கள். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் புனிதமான முறையில் ஈடுபட்டார்கள். அவர்களுக்கும் நன்றி.

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசும்போது கூறியதாவது;-

தமிழர் விடுதலைக்கூட்டணியில் மக்கள் நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள் என்பதை தேர்தல் எடுத்துக்காட்டி விட்டது. மானிப்பாய்த் தொகுதி மக்கள் கூட்டணியில் நம்பிக்கைவைத்துள்ளார்கள். என்பதை தேர்தல் காட்டிவிட்டது. தேர்தலில் போட்டியிட்டதன நோக்கம் தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்துவது தான்.

கூட்டணியின் வெற்றி

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறியதாவது;- இன்று தான்பெற்ற வெற்றி தமிழர் கூட்டணி வெற்றியாகும். சுயாட்சிக்கழகத்தலைவர் கூட்டணிக்கு எதிராக பல பிரசாரங்கள் செய்தபோது மக்கள் கூட்டணியில் நம்பிக்கை வைத்துஆதரித்திருக்கிறார்கள். அதுவே மக்களின் நம்பிக்கையுடைய கட்சியாகும். கூட்டணிதான் தமிழ் ஈழத்தைப் பெறக் கூடிய ஒரே ஒரு கட்சியாகும்.

தமிழர்விடுதலைக் கூட்டணி தமிழ் ஈழ இலட்சியத்துடன் போட்டியிட்டது. நாம் ஒற்றுமைப்பட்டு தமிழ் ஈழம் காண்போம். எனக்கு எதிராக சுமத்தப்பட்ட அத்தனை பொய்ப் பிரசாரத்தையும் முறியடித்த இளைஞர்களுக்கு என் நன்றி.

பருத்தித்துறை எம்.பி.திரு. கே. துரைரத்தினம் கூறியதாவது:-இந்தத்தேர்தலில் பலத்த பிரசாரத்தின் மத்தியில், தமிழர் விடுதலைக் கூட்டணி மீது நம்பிக்கை வைத்து பெருந் தொகையான வாக்குகளால் என்னைத் தேர்ந்தெடுத்ததற்கு நன்றி. நாம் கொண்ட லட்சியத்தை அடைய தொடர்ந்து பேராடுவோம்.

கொள்கைக்கு கிடைத்த வெற்றி

வட்டுக் கோட்டை எம்.பி திரு.கே.திருநாவுக்கரசு கூறியதாவது :-ஒன்றரை மாதமே தான் அறிமுகமான போதும் என்னை பெரும் தொகையான வாக்குகளால் தெரிவு செய்துள்ளீர்கள். இதுதமிழர் கூட்டணியின் கொள்கைக்காககிடைத்த வெற்றியே. வடக்கு கிழக்கு மாகாணங்களில், தமிழர் கூட்டணி மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது.எந்தக் கொள்கை லட்சியத்திற்காக எங்களை பாராளுமன்றம் அனுப்பினீர்களோ, அதற்காக இறுதிவரை போராடுவோம்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின், அமைதியாக செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றேன்,

"இயக்கத்தை தொடர்ந்து நடத்த மக்கள் தீர்ப்பு"

யாழ்ப்பாணம், சனி

"சுதந்திரம் வேண்டுமென தமிழ் மக்கள் வாக்களித்து விட்டனர்.விடுதலைஇலக்கை தொடர்ந்து நடத்த அவர்கள் அனுமதிவழங்கி விட்டனர்.

"கோப்பாய் தொகுதியில் வெற்றி திரு எஸ்.கதிரவேலுப் பிள்ளை தேர்தலில் வெற்றி பெற்றபின் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

"400 வருடங்களுக்குப்பின் இந்த சந்தர்ப்பத்தில், இப்படி சுதந்திரத்திற்காக வாக்களிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த சந்தர்ப்பத்தை தவறவிடாது தங்கள் சுதந்திரம்மட்டும்தான் வேண்டுமென்று வேறு எதுவும் வேண்டாமென்றும் வாக்களித்தீகள். இப்படி பொதுஜன வாக்கெடுப்பாக. நீங்கள் அளித்த தீர்ப்பை தமிழ் மக்களும், சிங்கள மக்களும், உலகமக்களும், அறியக் கூடியதாயிருந்தது."

ஆனந்தசங்கரி

சிவிநெச்சி எம்.பி.திரு.வி. ஆனந்தசங்கரி பேசுகையில் கூறியதாவது;

எனது தொகுதியில் முன் நூறுக்கு மேற்பட்ட வாலிபர்களுக்கு வேலைவழங்கி, பல ஆயிரம், ஏழைகளுக்கு காணி வழங்கி, இத்தகைய முடிவை மக்கள் அளித்துள்ளனர்.

இந்த வெற்றி எனது வெற்றியல்ல உண்ணமல், உறங்காமல் உழைத்த இளைஞர் பேரவை, மகளிர் பேரவையின் வெற்றியாகும்.

உயிர் கொடுத்தாவது இனத்தின் விடுதலைக்காக உழைக்க தயாராக இவுக்கின்றேன்.

இலட்சியத்தின்வெற்றி

நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது; எனது வெற்றி கூட்டணியின்வெற்றி, தமிழ் ஈழத்திற்கு கிடைத்த வெற்றி என்தொகுதி மக்கள்இலட்சியத்திற்கு அளித்தவெற்றி,

தென்னிலங்கை தேர்தல் முடிவை பார்க்கும்போது தமிழர் விடுதலை கூட்டணியினர்தான், எதிர்க்கட்சியினராக இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நீங்கள் வாக்களித்ததன் மூலம் உங்கள் அனுமதியைதந்து விட்டீர்கள். எங்கள் லட்சியத்தை நிறைவேற்றபாடுபடுவோம்.

ஒற்றுமைமூலம் சாதனை

உடுப்பிட்டி எம்.பி.திரு.ரி. இராசலிங்கம் கூறியதாவது, வரலாற்றில், பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய புதிய சகாப்தத்தை ஆரம்பித்துள்ளோம். நாட்டில் நீண்டகாலமாக ஐந்தரை லட்சம் சிறுபான்மை தமிழ் மக்கழ் பிரதிநிதித்துவம் மூலமாக ஆட்சிமன்றம் செல்ல முடியாத நிலையை மாற்றி, ஒற்றுமைமூலம், பெரும் சாதனையை கூட்டணி நிலை நாட்டிவிட்டால் தமிழர் வரலாற்றில் இது ஒரு திருப்பமாக அமையும்.

தமிழ் மக்களின் ஒன்றுபட்ட சக்தியை உருவாக்குவதற்காக கூட்டணி நிறுவப்பட்டது.மதரீதியாகவும், பிரதேசரீதியாகவும் பிரிந்திருந்ததமிழ் மக்களை, தமிழரசு, தமிழ் காங்கிரஸ் என்று கட்சி ரீதியில் பிரிந்திந்த தமிழ் மக்களை ஒன்றுபடுத்திய சக்தி கூட்டணியிடம் உள்ளது.

தமிழ் மக்கள் மத்தியிலுள்ள குறைபாடுகளை அகற்றுவதன் மூலமே உண்மையான ஒற்றுமையை ஏற்படுத்தமுடியும். தமிழ் மக்களின்நம்பிக்கையைப் பெற்ற இயக்கமாக கூட்டணி திகழ்கிறது

உடுப்பிட்டியில், பலமுனைப் போட்டிக்குமத்தியில் இளைஞர்கள், உயர்ந்த நிலையில் செயல்பட்டு கூட்டணிக்கு வெற்றியளித்துள்ளார்கள். உலக நாடுகள் முழுவதுமே உடுப்பிட்டியின் தீர்ப்பை எதிர்பார்த்திருந்தது.

ஆரம்பகாலம் முதலே, உடுப்பிட்டி தொகுதியில் தங்கியிருந்து என் வெற்றிக்காக உழைத்த தந்தை செல்வாவின் புதல்வர் திரு.சந்திரகாசனுக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம். அவர் வெற்றியை தேடித்தர அயராது உழைத்தார். உடுப்பிட்டி வெற்றிக்காக உழைத்த சகலருக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் (அ)

காட்போட் பெட்டிகள் விற்பனை

"25-7-77 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு காட்போட் பெட்டிகளும், காட்போட் மட்டைகளும் ஏலத்தில் விற்கப்படும்"

வர்த்தக முகாமையாளர்
சீ-நோர், குருநகர்.

6688

வாரத்தில் 6 தினங்களே வேலை செய்யக கோரிக்கை

பண்டத்தரிப்பு, வெள்ளி

அரசாங்க விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிக்மைகளிலும் அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றவேண்டாமென்றும் வாரத்தில் ஆறு நாட்கள் மட்டுமே வேலைசெய்யும்மாறும் அரசாங்க பதிவு பெற்ற வைத்திய அதிகாரிகளினதும் உதவி வைத்தியர்களினதும் தொழிற்சங்கமதனது சங்க உறுப்பினர்களை வேண்டியுள்ளது. இது தொடர்பாக இவ்வாரம் மேற்படி சங்கத்தின் தலைமைப்பீடத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட சுற்றறிக்கையில் சமீபத்தில் நடைபெற்ற வேலைநிறுத்தம்பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.வேலைநிறுத்தத்தில்ஈடுபட்டவர்களின் சம்பளம்வெட்டப்பட்டதினால் அந்த வேலை நிறுத்த காலத்திற்கான மிகுதிக் கடமைகள் எவற்றையும் செய்யவேண்டாமென்றும் சுற்றுநிருபத்தில் கேட்கப்பட்டுள்ளது.

தற்போது இவர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மலேரியா இரத்தபரிசோதனை காசநோய்ப் பரிசோதனை, போன்ற மேலதிக வேலைகள் எதையும் இனிமேல் செய்ய வேண்டாமென்றும், மருந்துக் கலவைகள் தயாரிப்பதற்கு அத்தியாவசியமான மருந்து வகைகள் எல்லாம சரியாகவில்லாத இடத்து, கலவை மருந்துகளை வைத்தியசாலைகளில் தயாரிக்கவேண்டாமென்றும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

சாவகச்சேரித் துணி உற்பத்திகள் வெளிநாடு செல்லும்

மட்டுவில், வெள் கிறார்,

சாவகச்சேரியிலுள்ள தனியார் கைத்தறி நெசவு நிலையமொன்றில் உற்பத்தி செய்யப்படும்துணிவகைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளன. இந்தக் கைத்தறி உற்பத்திகள், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு நாடுகள் உட்பட மத்திய கிழக்கு நாடுகள் அத்தனைக்கும் வர்த்தக நிமித்தம் ஏற்றுமதி செய்யப்படவுள்ளன.

இது சம்பந்தமாக இந்த நெசவு நிலைய உரிமையாளர் அடுத்த மாதம் முதலாம் திகதி மத்திய கிழக்கு நாடுகளுக்கு தனது விஜயத்தை ஆரமபிக்கிறார்,

சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள கைத்தறி உற்பத்திகளை உலக நாடுகளுக்கு வர்த்தகத்திற்காக அனுப்பப்படவுள்ளன. அண்மையில் இந்த கைத்தறி நிலையத்திற்கு ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் இலங்கைத் தூதுவராலய துணைத் தலைவர் செல்வி முல்லர், டாக்டர் பேர்லிங் உட்படப்பலர் விஜயம் செய்து இங்கு மேற்கொள்ளப்படும்உற்பத்திகளைப் பார்வையிட்டதுடன் பெருமளவிலான துணிகளையும் விலை கொடுத்து வாங்கினர். (அ)

பூச்சிக்

பூச்சிக் கட்டுப்பாட்டில் புதியதொரு முறை

சுமிசிடின் வேறுவிதமாகச் செயலாற்றுகிறது. இதனாற்தான் சாதாரண பூச்சிக் கொல்லிகளை எதிர்க்கும் பூச்சிகளையெல்லாம் அது வெகு இலகுவாக அழிக்கிறது.

சுமிசிடின் பாவனைக்கு மிகச்சிக்கனமானது ஒரு அவுன்ஸை 20-40 கலன் நீரிற் கலக்கலாம். உங்களது மிளகாய், வெங்காயம், காய்கறி வகைகளை "ஸ்பொடப்டெரா" புழு, சேனைப்புழு முதலிய பூச்சிகளால் ஏற்படும் சேதத்திலிருந்து காப்பாற்ற சுமிசிடின்.

சுமிசிடின்

இரசாயன ஆராய்ச்சியில் புதியதொரு கண்டுபிடிப்பு.

LANKEM

GRAHT K 5 E 443

தேர்தல் முடிவுகளில் மேலும் சில விபரங்கள்

59-அம்பலாங்கொடை
ஐ. தே. கவைச் சேர்ந்த திலகசேகர 8175 பெரும் பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

155-பெல்மதுளை
ஐ தே கட்சியைச் சேர்ந்த தன்கந்த 2557 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

119-குருணகலை
ஐ. தே. கவைச்சேர்ந்த எல்லேகெதற 7455 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

12-மீரிகம
ஐ. தே. கவைச் சேர்ந்த விஜயரத்ன 9797 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

34-களுத்துறை
ஐ. தே. கவைச் சேர்ந்த விஜயமான 14,790 பெரும் பான்மைவாக்குகளால் வெற்றி பெற்றார்

142-மொனறாகலை
ஐ தே கவைச்சேர்ந்த புஞ்சிபண்டா 1945 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

104-நாத்தாண்டிய
ஐ தே கவைச்சேர்ந்த ஹேரத் 6448 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

105-சிலாபம்
ஐ. தே. கவைச் சேர்ந்த ஹரிந்திர கொரயா 5,807 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

118-பொல்காவெல
ஐ. தே. க. வேட்பாளர் ஜெயக்கொடி 4521 பெரும் பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

62-ஹினிதும
ஐ தே. க. வேட்பாளர் அமரசிறி 11,029 பெரும் பான்மைவாக்குகளால் வெற்றியெற்றார்.

37-தம்புல
ஐ. தே. க. வேட்பாளர் எக்நாயகா 2829 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

63-பத்தேகம
ஐ. தே. க. வேட்பாளர் விக்கிரமசிலக 5497 மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றார்

26-மகரகம
ஐ. தே. க. வேட்பாளர் குணசேகர 6717 மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றார்

11-திவுலப்பிட்டிய
ஐ. தே. க. வேட்பாளர் ஆரியரத்ன ஜெயதிலக 2874 மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றார்.

137-ஊவாபரணகம
ஐ தே கவைச்சேர்ந்த கருணரத்ன 6974 மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றார்

122-ஹொரவபொத்தன
ஐ தே கட்சியைச் சேர்ந்த ஹுருல்ல 4182 மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றார்

139-பண்டாரவளை
ஐ தே கவைச்சேர்ந்த ஆர் எம். அப்புகாமி 4577 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

126-கலாவெவ
ஐ தே கவைச் சேர்ந்த அதிகாரி 2643 மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றார்.

146-தேகாலை
ஐ தே க வேட்பாளர் என் ஏ. செனிவரத்ன 2064 பெரும்பான்மை வாக்குகளால் வைற்றி பெற்றார்.

144-டெடிகம
ஐ தே க வேட்பாளர் விஜயரத்ன 6732 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்

53-நாவலப்பிட்டி
ஐ தே கவைச் சேர்ந்த சந்திரா கருணரத்ன 9207 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

16-ஜா.எல
ஐ தே கவைச்சேர்ந்த யோசெப் மைக்கேல் 16,252 பெரும்பான்மைவாக்குகளால் வெற்றிபெற்றார்.

21-கொலன்னவ
ஐ தே கவைச் சேர்ந்த வீரசிங்கமல்லவராச்சி 5218 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றார்.

55-கொத்மலை
சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த ஆனந்த தஸநாயகா 3865 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றார்.

66- அக்மீமன
ஐ. தே. க வேட்பாளர் அபயவிக்ரம 6114 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

25-ஹோமகம
ஐ. தே. கடசி வேட்பாளர் காமினி ஜெயசூரிய 14388 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

121-தொடங்கஸ்லந்த
ஐ. தே. க வெட்பாளர் அவலத்துவல 4600 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

122-மதவாச்சி
சுதந்திரக்கட்சி வேட்பாளர் மைத்திரிபாலசேனநாயகா 366 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

14-அத்தனகல
சுதந்திக்கட்சி வேட்பாளர் சிறிமாவோ பண்டாரநாயகா 10,663 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

115-கட்டுகம்பொல
ஐ. தே. கட்சியைச் சேர்ந்த பெரேரா 9020 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

75-முல்கிரிகல
ஐ. தே. கட்சி வேட்பாளர் பிரான்சிஸ்கோ 4938 பெரும் பான்மை வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

109-நிக்கவெரட்டிய
ஐ. தே. கட்சி வேட்பாளர் வன்னிநாயகா 7904 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

68-தெனியாய
ஐ. தே கட்சி வேட்பாளர் அபயவிக்கிரம 5333 பெரும் பான்மைவாக்குகளால் வெற்றி பெற்றார்.

50-யட்டிநுவர
ஐ. தே. கட்சி வேட்பாளர் அபயசுந்தர 2592 பெரும் பான்மைவாக்குகளால் வெற்றி பெற்றார்.

52-கம்பளை
ஐ. தே. கட்சி வேட்பாளர் திஸநாயகா 6221 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

107-வென்னப்புவ
ஐ தே கட்சி வேட்பாளர் பெரேரா 11248 பெரும் பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

104-ஆனைமடுவ
சுதந்திரக்கட்சி வேட்பாளர் வணிசமங்காவ 1083 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

4-கொழும்பு கிழக்கு
ஐ தே கட்சி வேட்பாளர் எட்மன்ட் சமரவிக்கிரம 12043 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

154-இரத்தினபுரி
ஐ தே கட்சியைச் சேர்ந்த புஞ்சிநிலமே 7523 பெரும் பான்மைவாக்குகளால் வெற்றி பெற்றார்.

153-எகலியகொட
ஐ தே கட்சியைச் சேர்ந்த மோர்வின் குலரத்ன 6972 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

இறக்குவானை
ஐ தே கட்சியைச் சேர்ந்த குலரத்ன 6878 பெரும் பான்மைவாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

150-எட்டியாந்தோட்டை
ஐ தே கட்சியைச் சேர்ந்த வின்சன்ட் பெரேரா 2517 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

103-புத்தளம்
ஐ தே கட்சியைச் சேர்ந்த நைனாமாக்கார் 9168 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

143-வெள்ளவாயா
ஐ தே கட்சியைச் சேர்ந்த குமாரதாஸ 1793 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

152-தெரணியகலை
ஐ தே கட்சியைச் சேர்ந்த வணிகரத்ன 10240 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

159-கலவானை
ஐ தே கட்சியைச் சேர்ந்த பெனப்பிடடிய 1562 பெரும் பான்மைவாக்குகளால் வெற்றி பெற்றார்.

27-கொப்பறுப
ஐ தே கட்சியைச் சேர்ந்த தர்மசேன ஆட்டிகல 5600 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

113-பண்டுவஸ்நுவர
ஐ தே கட்சியைச் சேர்ந்த ரதநாயகா 4185 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

13-மினுவாங்கொட
ஐ தே கட்சியைச் சேர்ந்த பெனட் குணசேகரா 6103 பெரும்பான்மை வாக்குகளால் தெரிவானார்.

158-நிவித்திகல
ஐ தே கட்சியைச் சேர்ந்த காமினி அத்துகோறள 1655 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

10-கட்டானை
ஐ தே கட்சியைச் சேர்ந்த விஜயபாலமெண்டிஸ் 4212 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

114-குளியாப்பிட்டி
ஐ தே கட்சியைச் சேர்ந்த லயனல்ஜயதிலகா 9073 பெரும் பான்மைவாக்குகளால் வெற்றியீட்டினார்.

77-தங்காலை
ஐ தே கட்சியைச் சேர்ந்த வீரசிங்க 11 783 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

22-கோட்டே
ஐ தே கட்சியைச் சேர்ந்த ஆனந்ததிஸ்பதி அல்விஸ் 7874 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

24-அவிசாவளை
ஐ தே கட்சியைச் சேர்ந்த எம் டி பிரேமரத்ன 5915 பெரும்பான்மை வாக்குகள் பெற்று வெற்றியீட்டினார்.

28-மொறட்டுவ
ஐ தே கட்சியைச் சேர்ந்த திரேன் பெர்னாண்டோ 14,874 பெரும் பான்மை வாக்குகள் பெற்று வெற்றியீட்டினார்.

76 பெலியத்த
ஐ தே கட்சியைச் சேர்ந்த ரஞ்சித்அட்டபத்து 6393 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியீட்டினார்.

36-அகலவத்தை
ஐ தே கட்சியைச் சேர்ந்த மெரில்காரியவாசம் 11,376 பெரும்பான்மை வாக்குகள் பெற்று வெற்றியீட்டினர்.

120-மாவத்தகம
ஐ தே கட்சியைச் சேர்ந்த பிரேமச்சந்திர 4784 பெரும் பான்மைவாக்குகளால் வெற்றி பெற்றார்.

108-கல்கமுவ
ஐ தே கட்சியைச் சேர்ந்த லொக்குபண்டா 5004 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

71-கம்புறுப்பிட்டிய
ஐ தே கட்சியைச் சேர்ந்த மலலவாராச்சி 9676 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றியீட்டினார்.

145-கலிகமுவ
ஐ தே கட்சியைச் சேர்ந்த விமலா கன்னங்கரா 3755 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

9-நீர்கொழும்பு
ஐ தே கட்சியைச் சேர்ந்த டென்ஸில் பெர்னாண்டோ 14752 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியீட்டினார்

147-றம்புகண
ஐ தே கட்சியைச் சேர்ந்த கருணரத்ன 5982 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

160-கொலன்ன
ஐ தே கட்சியைச் சேர்ந்த நந்தமத்யூ 7475 பெரும் பான்மைவாக்குகளால் வெற்றியீட்டினார்.

149-அரநாயகா
ஐ தே கட்சியைச் சேர்ந்த வசந்த உதயரத்ன 6180 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

31-ஹொரண
ஐ தே கட்சியைச் சேர்ந்த இந்திரதாச ஹெட்டியராச்சி 7785 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

69-ஹக்மன
ஐ தே கவைச்சேர்ந்த வணிகசேகர 7506 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றியீட்டினார்.

30-பண்டாரகம
ஐ தே கவைச்சேர்ந்த சேனராஜா சமரநாயகா 8302 பெரும்பான்மை வாக்குகளால் தெரிவானார்.

61-பெந்தர-எல்பிட்டி
ஐ தே. கவைச் சேர்ந்த ரூபசேன கருணதிலக 11,854 பெரும்பான்மை வாக்குகளால் தெரிவுபெறியப்பட்டார்.

33-மத்துகம
ஐ தே கவைச்சேர்ந்த விஜயகுணரத்ன 14,987 பெரும் பான்மை வாக்களால் வெற்றி பெற்றார்

40-ரத்தோட்ட
ஐ தே கவைச் சேர்ந்த கவிரத்ன 12,035 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றார்

44-உடகம்பொல
ஐ தே கவைச் சேர்ந்த அத்தனாயக 2402 பெரும் பான்மை வாக்குகளால் வெற்றியீட்டினார்

29-பாணந்துறை
ஐ தே கவைச் சேர்ந்த நெவில்பெரினாண்டோ 11,131 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்

57 வலப்பனை
ஐ. தே. கட்சியைச் சேர்ந்த ரேணுகாஹேரத் 3916

(6-ம்பக்கம் பார்க்க)

அதிக சக்தி நிறைந்த பானம்
சோயாரின்

கோப்பிக்கானகப் பாவிக்கக்கூடியது
கிடைக்குமிடம்:
அன்னா கோப்பிபார்
4, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
1, மத்திய சந்தை, சுன்னாகம்.

மரண அறிவித்தல்

திருமதி சோதி மாகிறட்

திருமதி சோதி மாகிறட் காலமாகிவிட்டார். இவர் திரு. அந்தோனிசோதியின் மனைவியும், திருமதி பிரான்சிஸ்கா டானியல் (ஆசிரியை சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயம்) திரு. மரியதாஸ் (விளையாட்டு அதிகாரி கோப்பாய் - முன்னைநாள் விளையாட்டு அதிகாரி புத்தளம்) திரு. அமிர்தநாதர் (கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்) திரு. அலெக்சாண்டர் (முகாமையாளர் றியோ சினிமா யாழ்ப்பாணம்) திருமதி திரேசம்மா வலன்ரைன், செல்வி சூ. வுளோரு மரியா (தொழில் மந்திரி அலுவலகம் கொழும்பு) ஆகியோரின் தாயாரும், திரு. டானியல் (இளைப்பாறிய அரசாங்க லிகிதர் சேவை) திரு. வலன்ரைன் (சிறைச்சாலை உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்) திருமதி யூலியற், புனிது, கசில்டா ஆகியோரின் மாமியாரும், உதயகுமார் வலன்ரைன், சுரேஸ் ஜயலத் கென்ஸ்சிலி, பேட்டிஜெயா, ஜெயானந்தன் ஆகியோரின் பேத்தியுமாவர். அன்னாரின் பூதவுடல் குருநகர் 85/2, மணுண்காமல் வீதியிலிருந்து இன்று 23-7-77 மாலை 4-30 மணியளவில் யாழ் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார் உறவினர் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

6704

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்-லதா
வீட்டுக்கு வந்த
மருமகள்

நாகமஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 3-30
சிவாஜி நடித்த
ஹரிச்சந்திரா

மனோகரா தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்] சிவாஜி - வைஜயந்திமாலா நடித்த
சித்தூர் ராணி பத்மினி

வெகு விரைவில் வருகிறது
எம். ஜி. ஆர் லதா நடித்த
உழைக்கும் கரங்கள்

சாந்தி யாழ். நகர் தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
போன்: 7642
எம். ஜி. ஆர். - பத்மினி - நம்பியார்
ராணி சம்யுக்தா

விஸ்ஸர் சிவராம், கீதாஞ்சலி,
(யாழ்ப்பாணம்) தர்மலிங்கம், ஸ்ரீதேவி நடித்த
தினசரி 4 காட்சிகள்
ஜெயேந்திரா மூவீஸ்
காத்திருப்பேன் உனக்காக

REGAL Daily: at 4-45, 7-00 & 9-30 p. m. only
(JAFFNA)
NORMAN WIDOM IN
"ON THE BEAT"
FULL COMEDY

80-வது நாள்
ராணி எம். ஜி. ஆர். — லதா
(யாழ்ப்பாணம்) (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

77-வது தினம்
ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) போன்: 7180
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

வெலிங்டன் [யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

ரிடோ போன்: 7493 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்)
ஜெய்சங்கர்—சுஜாதா
நீ ஒரு மகாராணி

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் சிவாஜி - பத்மபிரியா
(யாழ்ப்பாணம்) முத்துராமன் - சகுந்தலா நடித்த
தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
CRAZY BOYS and
THE QUEEN'S NECKLACE
(Color-Scope)

வரி விளம்பரம்

பயிற்சி

6 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 01-08-ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு; இன்ஸ்டிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னோலொஜி, 11/B. ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 6686

தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பெண் லிகிதர்கள் தேவை. வடமராட்சிப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. விளம்பர இல. 6693, மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 6693

கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு 134

1. கந்தையா சுந்தரலிங்கமும்,
2. பெண் கமலாவதியும் இருவரும் வறுத்தலை விளான்

எதிராக வழக்காளிகள் பொன்னம்பலம் தணிகாசலம். இணுவில் மேற்கு இணுவில் எதிரிகள்

மல்லாகம் மாவட்டக் கோட்டில் இல. ஈடு 134 வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1977-ம் ஆகஸ்ட் மீ 3-ம் திகதி புதன் கிழமை (3-8-77) முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

ரூ பா 5421/-21 பின் 9-5-74 தொடக்கம் 17-1-75 வரைக்கும் ரூபா 4000/-க்கு 11 வீத வட்டியும், பின் முழுத் தொகைக்கும் இறுபடும் வரையும் 5% வீதவட்டியும் கோட்டுச் செலவுரூபா 432 சதம் 20.

ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம்டிஸ்றிக் வலிகாமம்வடக்கு பகுதி உடுவிற் கோவிற்பற்று இணுவில் இறை 'வேருவிச்சி கல்மொண்டி' நிலை 3. இதில் வடக்குப் பக்கமாக நிலை 1 குளி 7½ கல்வீடும் மிகுதிக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இந்தப்பரப்பு ஒன்று குளி ஏழரைக்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு பொன்னம்பலம் இளையதம்பியின் ஆதனம் மேற்குகனகசபை பெண் பாக்கியத்திற்கும் மறுபெயர்க்குரியா தனங்கள் தெற்கு இதன் மிகுதியாதனமாகியபொன்னம்பலம் இளையதம்பியினதனம் இதடங்கலும், அதைச் சேர்ந்தவைகளும்.

சி. செ. மாரிமுத்து,
நீதிமன்றங்களின் விற்பனவு ஆணையாளரும் விலை மதிப்பாளரும்.

விதானை வளவு,
சித்தங்கேணி.
28-6-77. 6703

வழமைபோல் பஸ்சேவை

யாழ்ப்பாணம், சனி பொதுத் தேர்தலை ஒட்டி ரத்துச் செய்யப்பட்டிருந்த சகல தூர இடங்களுக்கான பஸ்சேவைகளும் நேற்று முதல் வழமை போல்மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. (இ)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி - பத்மினி
ராஜபக்தி

யாழ். நகர கூட்டுறவுச் சங்கம்
பதவிகள் வெற்றிடம்

கீழ்க்காணப்படும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் வேண்டிய தகவல்களுடன் தயாரிக்கப்பட்டு தலைவர், யாழ்.நகர கூட்டுறவுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், 121 1/2 வங்கிச்சாலை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 10-8-77ல் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும்.

1. பொதுமுகாமையாளர் தரம் III — சம்பள அளவுத்திட்டம் 340—590

தகைமைகள்; 15×10,20×5
1. கூட்டுறவுப் பயிற்சி பெற்றுள்ள பட்டதாரி.
2. 3 வருடகால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தர தராதரப் பத்திரமும்,
3. 5 வருடகால அனுபவம் பொருந்திய முன்னை நாட் கூட்டுறவுப் பரிசோதகர், அல்லது
4. ரூபா 20,00,000 இனை வருடாந்த மொத்த விற்பனவாகக் கொண்ட வியாபாரத் தாபனமொன்றின் மேல் முகாமைப் பதவியொன்றில் 3 வருடகால அனுபவமுடைய ஒருவர்.

2. கணக்கு எழுதுநர் தரம் II — சம்பள அளவுத்திட்டம் 180—304

தகைமைகள்:- 6×10,8×8
1. கணக்கியல் அல்லது வர்த்த எண்கணிதம் உட்பட 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரணதர)ச் சித்தி, அல்லது
2. கணக்கியலில் திறமைச் சித்தியுடன் கூடிய கூட்டுறவு வேலையாளர் (சாதாரணதர) தராதரப் பத்திரம், கணக்கியலில் அல்லது எண்கணிதத்தில் அல்லது வர்த்தக எண்கணிதத்தில் திறமைச் சித்தியுடன் கூடிய க. பொ. த. ப. (சாதாரணதர) இனையுடைய விண்ணப்பகாரருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

3. பொது எழுதுநர் தரம் III — சம்பள அளவுத்திட்டம் 135—240

தகைமைகள்: 5×12,7·50×6
1. எண்கணிதத்தில் திறமைச் சித்தியும் 6 பாடங்களில் சித்தியும் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரணம்)

4. சில்லறைப் பண்டசாலை முகாமையாளர் தரம் III — சம்பள அளவுத்திட்டம் 180—320

தகைமைகள்; 8×10,10×6
1. 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரண)ச் சித்தியுடன் தனிச்சிறப்புரிமை உற்பத்திப் பொருட்கள் விற்பனவில் இரண்டு வருடகால அனுபவமும்,

5. விற்பனையாளர் தரம் II — சம்பள அளவுத்திட்டம் 135—225

தகைமைகள்:- 6×10·7.50×4
1. 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரண)ச் சித்தியும் ஒரு வருட கால அனுபவமும்,

6. காவற்காரர்/சேவகர் தரம் I — சம்பள அளவுத்திட்டம் 150—212

தகைமைகள்:- 5×10,6×2
1. 8-ஆந்தரக் கல்வித் தகைமை பெற்றுள்ளசேவகர்.
2. உடனலமும் மற்றைய பதவிகளைப் பொறுத்தவரையில் அனுபவமும்,

7. தட்டெழுத்தாளர் தரம் I — சம்பள அளவுத்திட்டம் 200—320

தகைமைகள்:- 8×10,10×4
1. தட்டெழுத்தும் ஒரு பாடமாக அமைந்த ஆறு பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரணதர)ச் சித்தியும் ஒரு வருடகால அனுபவமும் (வேகம்; நிமிடமொன்றுக்கு 40 சொற்கள்)

6691

வாலிபர்களுக்கும் யுவதிகளுக்கும்
வேலைவாய்ப்பு வழிகாட்டி நிலையம்
[Vocational Guidance Clinic]

யாழ். ரோட்டறி சங்கம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வேலையற்ற வாலிபர்களும் யுவதிகளும் தமக்கேற்றதொழிலைத் தேர்ந்தெடுப்பதற்கு ஆலோசனை வழங்குவதுடன் பொருத்தமான வேலைவாய்ப்பைப்பெறுவதற்கும்இயன்றவரைஉதவிசெய்யும் நோக்குடன் யாழ்ப்பாணரோட்டறிசங்கத்தினர் ஒரு **வழிகாட்டி நிலையத்தை** முத்திரைச் சந்தையடியிலுள்ள யாழ் இன் ஹோட்டலில் மாதாந்தம் நடத்துவார்கள்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை நேரிலோ அல்லது முத்திரை பதித்த மேலுறை அனுப்பித் தபாலிலோ டாக்டர் பா சோ. பாரதி அவர்களிடம் இம்மாதம் 25-ம் திகதி முதல் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:- 24, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

விண்ணப்பங்கள் 30-8-77 வரை ஏற்றுக்கொள்ளப்படும். 6702

ஈழநாடு
EELA NADU

தேர்தலில் நிகழ்ந்த பல 'புதுமை'கள்!

கொழும்பு, வெள்ளி

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனுவை பிரதம மந்திரி பதவியேற்று புதிய அரசாங்கத்தை அமைக்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி என்றுமில்லாதவாறு பெரு வெற்றியீட்டியுள்ளது! இச்செய்தி எழுதப்படும்வரை கிடைக்கப்பெற்ற 159 தொகுதிகளுக்கான முடிவுகளில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு 137 ஸ்தானங்கள் கிடைத்துள்ளன.

இத்தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் பதவிவகித்த 12 அமைச்சர்கள் தோல்வியடைந்துள்ளனர்.

இடதுசாரி அரசியல் கட்சிகளும், இத்தேர்தலில் நாட்டு மக்களால் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

புனரமைப்புக்கு கிடைத்த வெற்றி

ஐ தே கட்சிக்குக் கிடைத்துள்ள மகத்தான வெற்றி, கட்சித் தலைவர் திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனு கட்சியைப் புனரமைப்புச் செய்த பயனே என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்

இதுவரை கிடைத்த தேர்தல் முடிவுகளின்படி மிகப் பெரும்பான்மை ஸ்தானங்களைப் பெற்றுள்ள ஐ தே கட்சித் தலைவர் திரு ஜெயவர்த்தனுவை, பிரதம மந்திரி பதவியேற்க வருமாறு ஜனாதிபதி கோரியுள்ளதாக ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து ஜனாதிபதியின் செயலாளர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் தேர்தல் முடிவுகள் முழுவதும் வெளியாகுமுன் பிரதமர் பதவியேற்க வருமாறு அழைப்பதற்கு இலங்கைக் குடியரசு சட்டத்தின்படி ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டம் நீங்கலாக வெற்றி

ஐக்கிய தேசியக்கட்சி யாழ்ப்பாண மாவட்டத்தைத்தவிர நாட்டின் ஏனைய பாகங்களில் நகர்ப்புறம், கிராமப்புறங்களில் வெற்றியீட்டியுள்ளது.

கடந்த ஆட்சிமன்றத்தில் 91 ஸ்தானங்களுடன் இருந்த சுதந்திரக்கட்சி இதுவரை வெளியான தேர்தல் முடிவுகளின்படி 6 ஸ்தானங்களை மட்டுமே பெற்றுள்ளது.

இதேவேளை ஐ. தே. கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி தவிர்ந்த வேறு எந்தக்கட்சியும் இத் தேர்தலில் வெற்றி பெறமுடியவில்லை.

12 அமைச்சர்கள் மண்கவ்வினர்!

அமைச்சர்கள் பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகா, ரி. பி. இலங்கரத்ன, எஸ். கே. கே. சூரியாராச்சி, கே. பி. இரத்நாயகா, ஹெக்டர் கொப்பேகடுவ, செல்லையா குமாரசூரியர், ரி. பி. தென்னக்கூன், எஸ். ரி. ஆர். ஜெயவர்த்தனு, வி. ரி. ஜீ. கருணரத்ன, சபா நாயகர் ஸ்டான்லி திலகரத்ன உட்பட பல பிரதி அமைச்சர்களும் இத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டுள்ளனர்.

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா அத்தனகல தொகுதியில் இருந்து மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளபோதிலும் அவரால் முன்னர் பெற்றிருந்த பெரும்பான்மை வாக்குகளைப் பெற முடியவில்லை, 1970 தேர்தலில் அவருக்கு 21,000 அதிகப்படியான வாக்குகள் கிடைத்துள்ளன. இத் தேர்தலில் அவருக்கு அதிகப்படியாக 10,000 வாக்குகளே கிடைத்துள்ளன. அமைச்சர் மைத்திரிபால சேனநாயகாவுக்கு 466 பெரும்பான்மை வாக்குகளே கிடைத்தன, பல அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இத் தேர்தலில் மண் கவ்வியுள்ளதும் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

சமசமாஜக்கட்சித் தலைவர் கலாநிதி என, எம். பெரேரா, ஐ. தே. கட்சி வேட்பாளர் வின்ஸன்ட் பெரேராவிடம் எட்டியாந்தோட்டையில் தோல்வியடைந்தார்.

இக் கட்சியின் ஏனைய தலைவர்களான கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா, வெஸ்லி குணவர்தனு, பெர்னாட் டி'சொய்சா ஆகியோரும் ஐ தே கட்சி வேட்பாளர்களிடம் தோல்வியடைந்தனர்,

அக்குரஸ தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க ஐ. தே. கட்சி வேட்பாளரிடம் தோல்வியடைந்துள்ளார்.

கட்டுகம்பொல தொகுதியில் போட்டியிட்ட இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. ரி. பி. சுபசிங்க மூன்றும் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார். இவர் சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் கைத்தொழில் அமைச்சராக இருந்துவெளியேறியவராவார்.

(உ.)

காணாமல்போன குழந்தை கிடைத்தது?

யாழ்ப்பாணம், சனி

யாழ். ஆஸ்பத்திரியில் அண்மைல் காணாமல் போன சிசு பஸ்ஸில் ஒரு வீட்டிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்தக் குழந்தையைக் கைப்பற்றிய பொலிசார் அந்த வீட்டைச் சேர்ந்த ஓர் இளம் பெண்ணையும்கைதுசெய்தனர்.

குழந்தையும் அப்பெண்ணும் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 23ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.

வாக்குச்சீட்டு 100 ரூபா?

(கொழும்பு)

நடந்துமுடிந்த பொதுத் தேர்தல் வாக்களிப்பின்போது வாக்குச் சீட்டொன்று 100 ரூபாவுக்கு விற்கப்பட்டுள்ளதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

வாக்குச் சீட்டு அளவிலான கடதாசி ஒன்றை தம்முடன் வாக்குச் சாவடிகளுக்கு எடுத்துச் செல்லும் வாக்காளர்கள் அங்கு வாக்குச் சீட்டுக்களை வாங்கியபின்னர் தம்முடன் எடுத்துச் சென்ற கடதாசியை வாக்குப் பெட்டிக்குள் போட்டுவிட்டு உண்மையான வாக்குச் சீட்டை வெளியே எடுத்து வந்து வெளியே அச்சீட்டுக்களை தலா 100 ரூபாவுக்கு விற்றுள்ளதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

வாக்களிப்பில் ஆள்மாறாட்டமும் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தேர்தல் முடிவு

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலான வாக்குகளால் வெற்றி பெற்றார்

151-ரூவான்வெல

ஐ தே கவைச் சேர்ந்த இம்புலான 4067 பெரும்பான்மை வாக்குகளால்வெற்றி பெற்றார்.

148-மாலவெல்ல

ஐ தே கட்சியைசேர்ந்த வெலிகமமான 6579 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

18-தொம்பே

ஐ தே கட்சியைச் சேர்ந்த ராஜகருணா 2397 பெரும்பான்மைவாக்குகளால் வெற்றியீட்டினார்.

11-பிபில

ஐ தே கட்சியைச் சேர்ந்த ஆர். எம். தர்மதாச பண்டா 6360 பெரும்பான்மை வாக்குகளால் தெரிவாகியுள்ளார்

5-தெல்தெனிய

ஐ தே கட்சியைச் சேர்ந்த காமினி ராஜபக்ஷ 1137 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்

70-அக்குரஸ

ஐ தே கட்சியைச் சேர்ந்த தயானந்த விக்கிரமசிங்க 9303 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளார்

156 பலாங்கொடை

ஐ தே கட்சியைச் சேர்ந்த அபுசாலி 3673 அதிகப்படி வாக்குகள் பெற்று சுதந்திரக் கட்சி வேட்பாளர் மல்லிகாரத்வத்தையைத் தோற்கடித்தார்

கம்பகா - 15

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எஸ்.டி. பண்டாரநாயகா 522 பெரும்பான்மை வாக்குகளால் பெற்றிபெற்றார்.

'சிவா'வை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யோசை கேட்டுக்கொண்டிருந்தது.

அன்புப்பிடியில் யோகேஸ்

இளைஞர்களின் அன்புப்பிடியிலிருந்து விடுபடுவதற்கு திரு. யோகேஸ்வரனுக்கு பெரும் பாடாக இருந்தது. தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டபின் காரில் சென்ற அவரை இளைஞர்கள் மறித்துதூக்கிச்செல்ல முயற்சித்தனர்.

அப்போது திரு. யோகேஸ்வரன் இளைஞர்களின் அன்புப் பிடியில் மிகவும் சிரமப்படவேண்டி ஏற்பட்டது.

காரைநோக்கி ஓடிவந்த சுமார் 200 இளைஞர்கள் காரிலிருந்து திரு. யோகேஸ்வரனை வெழியே தூக்கி காரின் மேலே இருத்தி ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

சுமார் ஒரு மைல்தூரம்வரை அவர் அழைத்துச் சென்ற போது வழியில் அவருக்கு மாலையிட்டு தமது மகிழ்ச்சியை அப்பகுதி தெரிவித்துக்கொண்டனர்.

நேரத்தோடு போய்விட்டனர்

அதிகாலை 4 மணியளவில் முன்னாள் யாழ். எம். பி. திரு. சி. எக்ஸ். மார்ட்டின் பொலிஸ் பாதுகாப்புடன் கச்சேரியை விட்டுச்சென்றார் முன்னாள் நல்லூர் எம். பி. திரு. சி. அருளம்பலம் சிறிது நேரத்தில் காரில் சென்றுவிட்டார். மற்றும்சுயேச்சையாகப் போட்டியிட்ட அபேட்சகர்களும், தேர்தல் முடிவுகள் அறிவிக்கப் படுமுன்னரே சென்றுவிட்டனர்.

உடுப்பிட்டித் தொகுதித் தேர்தல் முடிவுதான் கடைசியாக நேற்றுக்காலை8மணிக்கு அறிவிக்கப்பட்டது. அரசாங்க அதிபர் தேர்தல் வேலைகளில் கமையாற்றிய உத்தியோகத்தர்களுக்கும் பொலிசாருக்கும் பொதுமக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

வேலர்:- என்னுடைய அப்பு வந்து பள்ளிக்கூடப்பக்கமாக போக கனுக்கண்டனான். நான் இந்த முறை ஆடி அமாவாசை விரதம் பிடிக்க மறந்து போனேன் அந்த குறைபோலை

மயிலர்:- இல்லை உன்னுடைய அப்புவின் வோட்டை ஆரோ போட்டிருக்கினம் போலை அதுதான் உந்த கனவு.

சுந்தர்

நல்லைகந்தன் ஆலயத்தில் 'சிவா'

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் தொகுதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதும் நல்லூர் தொகுதியின் தேசிய அரசுப் பேரவை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட திரு. மு. சிவசிதம்பரம் நேற்றுக்காலை 10 மணிக்கு நல்லூர் கந்தசாமி கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தார். பூசையை முடித்துக்கொண்டு வெளியே வந்தசமயம் ஆதரவாளர்கள் பலர் குழுமிநின்று வெடி கொழுத்தி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

பின்னர் அங்கிருந்து நேராக நல்லூர் முத்திரைச்சந்தியில் உள்ள, சங்கிலிய மன்னன் சிலைக்கு மாலையிட்டார். பின்னர் அங்கிருந்து கல்வியங்காடு சந்தியில் ஆதரவாளர்களால் மலர்மாலை அணிவித்தும் வெடி கொழுத்தியும் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

(கா)

பி.பி.ஸி.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வெற்றி பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

'வடக்குப் பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றிருப்பதுடன், ஆட்சிமன்றத்தில் ஆளும் கட்சிக்கு அடுத்த பலம்வாய்ந்த அரசியல் கட்சி என்ற நிலையையும் கொண்டிருக்கிறது' என்று பி. பி. ஸி விமர்சித்திருந்தது.

தேர்தல்முடிவுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

42—ஹரிஸ்பற்று

(இரட்டை அங்கத்தவர்)

ஏ. சி. எஸ். ஹமீட் (ஐ. தே. க) 49,173, ஆர். பிரேமச்சந்திர விஜேசிறி (சுயே) 23,943, ரத்னாயக்கா (சுயே) 23 671, தயானந்த (ஸ்ரீ ல சு க) 12,539, மற்றுள்ள ஸ்ரீ ல சு. க.) 10859, றிதிகஹபொல 1,377, உபாலி விமலவீர (சுயே) 205 ஆனந்த குணசிங்க (ம ஐ மு) 187, வதுறகும்புற (ல சு க) 130 ஆரியவன்ச (சுயே) 114.

திரு. ஏ. சி. எஸ். ஹமீட் 25,230 பெரும்பான்மை வாக்குகளால் முதல் அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

திரு. பிரேமசந்திர விஜயசிறி 272 பெரும்பான்மை வாக்குகளால் இரண்டாவது அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

35- பேருவலை

(இரு அங்கத்தவர்கள்)

அப்துல் பகீர் மார்க்கார் ஐ தே.க. 46,883

சமரநாயக்க ஸ்ரீ.ல சு க. 19,211

பதினாறு அபேட்சகர்கள் போட்டியிட்ட இத்தொகுதியில், ஜனாப் அப்துல் பகீர் மாக்கார் 27,672 அதிகப்படியான வாக்குகளால் முதல் அங்கத்தவராகவும் திரு. சமரநாயக்க 5,980 அதிகப்படியான வாக்குகளால் இரண்டாவது அங்கத்தவராகவும் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

2—கொழும்பு மத்தி

(மூன்று அங்கத்தவர்கள்)

ஆர். பிரேமதாச (ஐ தே க) 94128, ஜாபிர் ஏ காதர் (ஐ தே க) 58,972, ஹாலிம் இஸாக் (ஸ்ரீ ல சு க) 53,777, எம். எஸ். செல்லச்சாமி (இ தொ கா) 26,964, பிட்டர் செனமன் (கம்யூ) 24,568

இத் தொகுதியில் திரு. ஆர் பிரேமதாச 35,156 அதிகப்படியான வாக்குகளால் முதல் அங்கத்தவராகவும் ஜாபிர் ஏ காதர் 5195 அதிகப்படியான வாக்குகளால் இரண்டாவது அங்கத்தவராகவும் ஜனாப் ஹாலிம் இஸாக் 26813 அதிகப்படியான வாக்குகளால் 3-வது அங்கத்தவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க